**தேசிய இளைஞர் படையணி- 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்த பட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 410.2 மில்லியன் ஆன முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்டும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் அடைந்துள்ளதால், 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 வருடம் வரையான காலப்பகுதியில் நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருந்த ரூபா 744.5 மில்லியன் கிரயமுள்ள 08 பயிற்சி நிலையங்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்படுவதற்கு பதிலாக 2021 திசெம்பர் 31 வரையில் நடைமுறை வேலைகளாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 வருடம் வரையான காலப்பகுதியில் நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருந்த 11 பயிற்சி நிலையக் கட்டிடங்களை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 29 மில்லியன் மற்றும் 11 பயிற்சி நிலையங்களில் 18 கட்டிடப்பிரிவுகளை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 243 மில்லியன் மூலதனமாக்கப்படாது நடைமுறை வேலைகளாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெற வேண்டியவைகளில் குறிப்பிடப்பட்டிருந்த படையணியின் வெளியார் நிறுவனமொன்றான சிறு வியாபார அபிவிருத்தி பிரிவினால் 2015 முதல் 2021 வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் பயன்பாட்டிற்கான மற்றும் வீதவரிக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 14 மில்லியன் மற்றும் வென்னப்புவ பயிற்சி நிலையம் நிர்மாணிப்பதற்காக நிர்மான நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் ஆனது 2022 செப்டெம்பர் 15 வரையில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவில் இருந்து மீளப்பெற வேண்டிய ரூபா 13,144,155 ஆன தொகையை வருடாந்தக் கணக்குகளில் இருந்து கழிப்பதற்கு இளைஞர் படையணி சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வென்னப்புவ நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நிர்மாண நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட மேலதிகத் தொகையை மீளப்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | படையணிக்கு பெற வேண்ய அறவீடுகள் விரைவில் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படகின்ற ஏனைய செலுத்த வேண்டிய கட்டணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலக்கப்பட்ட பயிற்சிக்கு செலுத்த வேண்டிய ரூபா 1 மில்லியன் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படுகின்ற அட்டுறு செலவுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1.4 மில்லியன் ஆனது 2022 செப்டம்பர் 20, வரை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் புத்தகங்களில் விலக்கப்பட்ட பயிற்சிக்காக செலுத்த வேண்டிய ரூபா 1 மில்லியன் 2022 ஆம் ஆண்டில புத்தகங்களில் கழிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் ரூ.1.4 மில்லியன் அட்டுறு செலவுகள் எதிர்காலத்தில் தீர்க்கப்படும்.. | செலுத்த வேண்டிய தொகை விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 வரை நிர்மாணப் பணிகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த 04 பயிற்சி நிலையங்கள் மற்றும் , ஆரம்ப அளவுகளில் குறைபாடு காணப்பட்ட காரணத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த ஹோமரன்கடவல பயிற்சி நிலையக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 62.6 மில்லியன் ஆன நிர்மாண முற்பணம் இதுவரை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிர்மாண ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்ட பயிற்சி நிலையங்கள் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதற்கு கொடுக்கப்பட்ட நிர்மாண முற்பணத்தை தீர்க்கப்படுவதற்கான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாண முற்பணம் விரைவில் தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கணக்கு மீதி புத்தகங்களில் பதிவளிக்கப்படதல் முறையான முறையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் | தற்போது தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட | ஒப்பந்த நிர்வாகம் முறையாக மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தேசிய உபகரண மற்றும் இயந்திரங்கள் அமைப்பிற்கு தேசிய இளைஞர் படையணியின் 10 புதிய நிலையங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையங்களின் 21 கட்டிட அலகுகளுக்கான நிர்மாணங்களுக்கான ஒப்பந்தம் திறந்த டென்டர் நடைமுறைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாணங்களின் முன்னேற்றம் தோல்வியடைந்ததால் 2020 சனவரி 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்நிர்மாண ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. என்னும் தேசிய இளைஞர் படையணியால் அந் நிறுவனத்திற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 109.2 மில்லியன் ஆன மொத்த முற்பணத் தொகையில் ரூபா 37.6 மில்லியன் இந்நிர்மாண நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தில் மேலும் தீர்க்கப்பட வேண்டியிருந்த ரூபா 37,615,680 முற்பணத் தொகை இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் தீர்க்கப்படும்போது தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வேண்டியமை மற்றும் அறவிடப்பட வேண்டிய முற்பணம் விரைவில் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1 ஆம் பந்தி | சுற்றறிக்கை பிரகாரம் படையணியால் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023-2027 ஆம் ஆண்டிற்கான தேசிய இளைஞர் படையணியின் நிறுவனத் திட்டத்தின் வரைவைத் தயாரிக்கும் போது, அதன் தயாரிப்பு பணிக்காக தற்போது ஒரு நிபுணத்துவ ஆலோசகரிடம் அனுப்பி வைக்கப்பட்டள்ளதாக் குறிப்பிடப்பட்டிருந்தது. | படையணியின் ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் படையணியால் குறிப்பிட்ட திகதிக்கு 09 மாதங்கள் தாமதமாகி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டரீதியான தேவையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் விரைவில் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | படையணியால் 2021 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 2,378 ஆன சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுக்காக் நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டிற்குப் பிறகு, நிலையான சொத்துகள் பதிவேட்டைத் தயாரித்து நாளதுவரையாக்கப்படவ தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலையான சொத்துகள் பதிவேட்டைத் தயாரித்து நாளதுவரையாக் கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஈ) | 2022 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின் 2(4) பிரிவு | சபையின் நிர்வாகத்திற்குத் தேவையான தொழில்முறை பயிற்சி, இளைஞர் மேம்பாடு மற்றும் நிறுவலுக்கு 3 குழுக்கள் நியமிக்கப்பட வேண்டியதுடன் சபையினால் அதன் அதிகாரங்களை அந்தக் | எதிர்காலத்தில் தேசிய இளைஞர் படையணியின் சபையின் அங்கீகாரத்தின் படி செயற்படக்கூடிய குழுக்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். | இளைஞர் படையணிச் சட்டத்தின் பிரகாரம் சபையின் நடவடிக்கைகளு க்காக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். |

குழுக்களுக்கு பகிர்ந்தளிக்க முடியுமென்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தேசிய இளைஞர் படையணியால் படையணி ஆரம்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு செய்யப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17 மில்லியன் ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 28.7 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11.7 மில்லியன் ஆன பின்னடைபொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு வருடத்தின் வருமானம் ரூபா 37 மில்லியன் ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய இளைஞர் படையணியின் தலைமை அலுவலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற பதிவுரிமை வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 31.5 மில்லியன் பெறுமதியான 08 வாகனங்கள் இதுவரை படையணியின் பெயரில் கையேற்கப்படவில்லை. | தேசிய இளைஞர் படையணியால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், துரித முன்னேற்றம் காணப்படாத போதிலும், உரிய தேவைகளுக்கு ஏற்ப மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | படையணியின் நோக்கத்தை நிறைவேற்று வதற்காக சொத்துக்கள் முகாமைத்துவச் செயற்திறனாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த மற்றும் படையணிக்கு கையேற்க முடியுமாகவிருந்த 62 காணிகளில் 19 காணிகள் மாத்திரமே படையணிக்கு | படையணிக்கு இன்னும் கையேற்கப்பட வேண்டிய 43 காணிகள் தற்போது கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு | படையணியின் நோக்கத்தை நிறைவேற்று வதற்காக சொத்துக்கள் முகாமைத்துவச் |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 43 காணிகளின் கையேற்றல் நடவடிக்கைகள் இதுவரை முடிக்கப்பட்டிருக்க வில்லை. | வருகின்றது. இந்த 43 காணிகளில் 17 காணிகளின் கையகப்படுத்தும் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. | செயற்திறனாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் பணிகள் தொடங்கப்பட்டு .2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிர்மாண ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்ட நடைமுறை வேலைகளில் உள்ளடங்கியுள்ள ரூபா 20 மில்லியன் ஆன 02 பயிற்சி நிலையங்கள் மற்றும் ரூபா 3.7 மில்லியன் ஆன கோமரன்கடவல பெரசவி கட்டிடத்தில் 3.7 மில்லியன் ரூபாயில், மீதமுள்ள கட்டுமானப் பணிகள் 2022 ஒக்டோபர் 31 வரை மீண்டும் தொடங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்ட கொட்டபொல பயிற்சி நிலையம் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் தொழிற்பயிற்சி அதிகார சபையிடம் கையளிக்கப்படவுள்ளது. கற்பிட்டி பயிற்சி நிலையம் இரத்து செய்யப்பட்ட நேரத்தில், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் வங்கியில் வைக்கப்பட்டிருந்த செயற்திறன் மற்றும் முற்பண உத்தரவாதத் தொகை தேசிய இளைஞர் படையணிக்கு அறவிடப்பட்டுள்ளது. கோமரங்கடலை பெரசவி கட்டிடத்தின் எஞ்சிய நிர்மாணப் பணிகள் எதிர்வரும் காலத்தில் பெறப்படுகின்ற ஒதுக்கீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | பயிற்சி நிலையங்களின் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்படு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2011 திசெம்பர் 15 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, நாட்டில் இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்தும் பணியை சிறப்பாகவும், திறம்படவும் மேற்கொள்வதற்கு, தற்போதுள்ள இளைஞர் படையணிச் சட்டத்தைத் திருத்தியமைத்து, புதிய சட்டமொன்று இயற்றப்பட வேண்டியபோதிலும் அதற்காக 11 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்ட போதிலும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது, தற்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் முயற்சியின் கீழ் இது தொடர்பான வரைவை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | அமைச்சரவைத் தீர்மானத்தின்படி புதிய சட்டமொன்று இயற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின 18 ஆம் பிரிவின கீழ், 2003 ஒக்டோபர் 10 ஆம் திகதிய கட்டளைகளின் 4(ii) பிரகாரம் படையணியால் சர்வதேச தொழிலாளர் சந்தையை | தேசிய இளைஞர் படையணியின் அடிப்படைக் கற்கைநெறியை முடித்த பிறகு தொழில் பயிற்சிக்குப் போகாமல் இருப்பதற்கான காரணங்களாக உயர்கல்வி, வேலைவாய்ப்பு, சுயதொழில் | பயிற்சி பெறுபவர்கள் தொழில்முறை தகுதிகளைப் பெறக்கூடிய வகையில் கற்கைநெறிகள் |

| | | | |
|---|---|---|---|
| | இலக்காகக் கொண்டு, பல்வேறு துறைகளில் காணப்படும் தேசிய தொழிற்கல்வித் தகுதி பயிற்சியாளர்களுக்கு பெறப்பட முடியுமான கற்கைநெறி அரச தொழிற்பயிற்சி நிலையங்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்டு பயிற்சியாளரகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அல்லது வணிகச் செயற்பாடுகள், வெளிநாடுகளுக்குச் செல்வது போன்ற காரணங்களை குறிப்பிட் முடியும். கோவிட்-19 தொற்றுநோயின் ஆரம்பத் தாக்கம், தொழிற்பயிற்சிக்கு எதிர்பார்த்த எண்ணிக்கையிலான மாணவர்களை அனுப்ப முடியாத அடிப்படைப் பிரச்சினையாகும். இயக்கக் கட்டுப்பாடுகள் விதித்தல், போக்குவரத்துச் சிக்கல்கள் மற்றும் எதிர்பார்த்த காலக்கட்டங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கைநெறிகள் . ஆரம்பிக்கப்படாமை ஆகியவை தொழில் பயிற்சிகள் எதிர்பார்த்தவாறு கோரப்படாமைக்கான காரணங்களாகும். | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | படையணியால் 66 தனியார் நிறுவனங்களில் 132 கற்கைநெறிகள் மற்றும் 20 அரச தொழிற்கல்வி கற்கைநெறிகள் படிப்பதற்கு மட்டுமே தொழிற்பயிற்சி அளிக்குமாறு பயிற்சியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். அதற்காக ஒரு பயிற்சியாளருக்கு அதிகபட்ச பயிற்சிக் கட்டணம் ரூபா 100,000 நிர்ணயிக்கப்பட்டிருந்தும் கிரயம் ரூபா 100,000 மற்றும் ரூபா 800,000 இற்கிடைப்பட்ட வீச்சில் . கற்கைநெறிகள பயிற்சியாளர்களிடம் எடுக்கப்பட்டிருந்தது. மேலும், தொழிற்கல்வி கற்கைநெறிகளுக்கு அனுப்பப்படுகின்ற பயிற்சியாளர்கள், கற்கைநெறிகளை நிறைவு செய்து வேலை கிடைக்கும் வரை, கண்காணிக்கும் முறைமையொன்றும் படையணியால தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | கற்கைநெறிகளை கற்கும் மாணவர்களுக்கு, கற்கைநெறிகள் முடியும் வரை தொடர் கண்காணிப்பு நடாத்தப்பட்டு, எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகளுக்கான தகவல்களை சேகரிப்பதற்கு பின்தொடரல் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | தொழிற்கல்விக் கற்கைநெறிகளை முடித்த பயிற்சியாளர்களை அவர்கள் பணியில் அமர்த்தும் வரை கண்காணிக்கும் முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். |